Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

[illegible]
(1889)
ஆவணி 28உ
ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது
தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுமை] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி௵ புரட்டாதி௴ ச உ வெள்ளிக்கிழமை (20 SEPT. 1957) [இல-உச]

# யாழ். சைவ பரிபாலன சபை

## அறுபத்தொன்பதாம் ஆண்டுக் கூட்டம்

## சைவப்புலவர் தேர்வு நடத்த ஆலோசனை

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் அறுபத்தொன்பதாம் ஆண்டு நிறைவுக் கூட்டம் ஆவணி 29ந் திகதி சனிக்கிழமை (14-9-57) பிற்பகல் சபை நாவலர் மண்டபத்தில் சபைத்தலைவர் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் ஆரம்பமாயது.

சென்ற ஆண்டு நிறைவுக்கூட்ட அறிக்கை, காரியதரிசியின் ஆண்டறிக்கை தனாதிகாரியின் வரவு செலவுக் கணக்கு ஆகியவை வாசிக்கப் பெற்று ஏகமனதாக அங்கீகரிக்கப் பெற்றன. பின்னர், "சி" பிரிவு நிருவாகசபை அங்கத்தவர்களும் புதுவருட உத்தியோகத்தரும் தெரிவு செய்யப்பெற்றனர்.

உத்தியோகத்தர் தெரிவு பின்வருமாறு:-

தலைவர் திரு. த முத்துச்சாமிப்பிள்ளை.

உப தலைவர்கள்: வைத்திய கலாநிதி கே. இராசா, வடபகுதி வித்தியாதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம்

காரியதரிசி: திரு ஆ. தனபாலசிங்கம்.

உதவிக் காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு.

தனாதிகாரி: முகாந்திரம் இ. பொ. இராசையா.

சமயப் பிரசார அமைச்சர்: திரு. மு. மயில்வாகனம்:

கணக்குப் பரிசோதகர். திரு. ஏ. துரைசிங்கம்.

பத்திரிகை நட்டம் தொடர்ந்து வருவதுபற்றி ஆலோசிக்கப்பட்டது. பத்திரிகைக்குச் சந்தாக்காரர்களைச் சேர்ப்பதற்கும் நட்டத்தைக் குறைத்தற்கு ஆவன செய்வதற்கும் ஓர் உபசபை நிறுவப்பெற்றது.

சபை நாவலர் மண்டபத்துக்கு ஓர் மடைப்பள்ளி கட்டும் பொருட்டு ரூபா இரண்டாயிரம் நன்கொடையளிக்க முன்வந்த ஸ்ரீமதி வி. சிவகுருநாதர் அம்மையார் அவர்களுக்குச் சபையின் நன்றியைத் தெரிவிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

திரு இ. சிவகுருநாதர் அவர்களின் ஞாபக தினத்தில் மகேசுர பூசை முதலியவை செய்வதற்கு வேண்டிய உதவி புரிய முன்வந்தமைக்கும் சபையின் நன்றியை ஸ்ரீமதி சிவகுருநாதர் அம்மையாருக்குத்தெரிவிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஈழ நாட்டு மக்கள் இந்தியாவில் ஸ்தாபித்த தரும ஸ்தாபனங்களின் தொடர்பில் இந்தியாவில் வசிப்பதற்கு இந்திய அரசாங்கத்தை "விசா" வழங்குமாறு கேட்டும், இளஞ்சைவப்புலவர், சைவப் புலவர் பரீட்சைகள் சபையால் நடத்தப்படவேண்டு மென்றும், சைவசமயக்கல்லூரியொன்று நிறுவவேண்டு மென்றும், தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்துப் பெறும் முயற்சியில் எல்லாக் கட்சிகளின் ஒத்துழைப்பையும் கெட்டுக் கொள்வதாகவும்பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. மாலை ஐந்தரை மணியளவில் தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

# இறைத்தியானத்துடன்

## எச்செயலையுஞ் செய்க

### உண்மையான இன்பமடைய உள்ளவழி இதுவே

--0--0--

தியாகமே வாழ்க்கையின் அத்திபாரமாயமைதல் வேண்டும். ஒரு சமுகத்துக்கு, ஒரு இனத்துக்கு, ஒரு நாட்டுக்கு, உலகம் முழுதுக்கும் இனியவராய் ஒருவர் இருக்க விரும்பினால் அவருடைய வாழ்க்கையில் தியாகம் அமைதல் வேண்டும். இறைவனை இடைவிடாது சிந்திப்பதால் மாத்திரமே தியாகம் என்பது ஒருவருக்குச் சித்தியாகும். இடைவிடாத இறைத் தியானத்தால் 'நான' என்னும் அகங்காரம் அற்றுப்போகும். அகங்காரத்தை அடக்கி வருவோமானால் மற்றவர்களின் நலனுக்கு உழைப்பவராவோம்; அவ்வாறுழைத்தல் ஈற்றில் எங்களுக்கு நலன் தருவதாயமைகின்றது. ஆகையினாலே கடவுளையே ஆதாரமாகக் கொண்டு நாம் வாழுதல் வேண்டும். அவரை இடைவிடாது நினைவுகூர்ந்து செயலாற்றுவோமானால் அவர் எங்கள் உறைவிடமாயமைவார். இறைத் தியானம் எந்த நேரத்திலாயினும் மனத்தை விட்டு நீங்கக்கூடாது. பிற எண்ணங்கள் மனத்தில் இடம்பெற விடக்கூடாது, இவ்வித அனுட்டானஞ் செய்து வரும் பொழுது எங்கள் வாழ்க்கை இயல்பாகவே பிறர் நலனுக்கானதாய் அமையும். அப்பொழுது அது எங்கள் நலனுக்காயமைவதையுங் காண்போம்.

ஏனையோர் இன்பத்திலேயே எங்கள் இன்பம் தங்கியிருக்கின்றதென்பது ஆப்த வாக்கியமாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் இக்கால உலகம் இதற்கு எதிராகச் சிந்திக்கின்றது. மற்றவர்களுடைமையை நாம் அபகரிப்பதனால் நாங்கள் இன்புறுதலாகும் என்று இக் காலத்தவராகிய நாங்கள் நினைக்கின்றோம். இவ்வெண்ணம் பிழையானது. எங்கள் நலனை மற்றவர்களுக்காகத் தியாகஞ் செய்தே உண்மையான இன்பத்தை நாம் அடைதலாகும். ஓர் பிள்ளைக்காகத் தாயானவள் வருந்திச் செயலாற்றுகின்றாள். தான் பெரும் இடைஞ்சல்களை அனுபவித்த போதிலும் பிள்ளைக்குச் செய்ய வேண்டியது செய்வதில் தாய் இன்பமடைகின்றாள். அவள் உண்பதை விடுகிறாள்; நித்திரையைத் தவிர்க்கிறாள். பிள்ளை மீதுள்ள அன்பால் அவ்வாறு செய்வதனால் அச் செயல்களிலிருந்து அவள் இன்பம் பெறுகிறாள். குறித்த தாய் போல நாங்களும் மற்றவர்களின் இன்பத்துக்காக இடைஞ்சற்பட்டும் செயலாற்றுவோமானால் மிகுந்த இன்பத்தை நாம் அடைகிறோம். உங்கள் மனத்தைக் கடவுளுடன் ஐக்கியப்படுத்தாவிட்டால் தியாகம் என்பது சித்திக்கமாட்டாது. எந்த வேலையைச் செய்கின்ற நேரத்திலும் இறைத் தியானம் உங்கள் மனதில் நீங்காதிருத்தல் வேண்டும்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

அரசியல் அலை

# சிங்கக்கொடி ஏற்றிவைத்த சிநேகிதர்கள்

--:o:--

## மந்திரி மரைக்காரை நிந்தனை செய்தார்களா?

--:0:--

## உடன்படிக்கை ஒருபுறம் தடியடிச் சம்பவம் மறுபுறம்

--0--

இன்னும் அந்த மாய ஒப்பந்தம் இயங்கத் தக்க நிலையில் இருக்கின்றதா? என்பதுதான் இப்பொழுது அரசியல் வட்டாரங்களில் எழுந்திருக்கும் கேள்வி. ஒப்பந்தந்தான் எத்தகையது என்று யாரும் உற்றறிதற்குமுன் இந்த நிர்ப்பந்த நிலை உண்டானது பெரும் ஆறுதலை அளிக்கின்றது.

பதவியாவிலே பகிரங்கமாகக் குடியேற்றம் பவனியோடாரம்பமாகின்றது. ஆனால் அந்த ஒப்பந்தத்தையும் வந்தனை செய்கின்ற பரோபகாரிகளும் பகிரங்கமாகவே பண்டாரநாயகவின் ஆட்சியைப் பாராட்டுகின்றார்கள். வெளிநாடுகளில் உல்லாசஞ் சென்றிருப்பவர்கள் வீடுதிரும்பிய பின்னும் அரசாங்கத்தை ஆதரிப்பார்கள் என்றும் சொல்லப்படுகின்றது.

சமஷ்டிக்கட்சிக்கும் காணி மந்திரிக்கும் இடையில் நடந்த எழுத்து விவாதம் ஒப்பந்தத்துக்கு ஒரு சாற்றுகவியாயமைந்திருக்கின்றது.

அதுபோதாதென்றுவேறு விபரீதங்களும் நிகழ்ந்துவிட்டன. சிங்கக்கொடி முதல் முதலாகத் தமிழ்பேசும் மக்களால் ஏற்றப்பட்டது மட்டக்களப்புமாநாட்டிலேதான். அந்த நகரத்துக்கு விருந்தினராகச் சென்ற மந்திரி மரிக்காரின் மனம் நொந்துபோகும் வகையில் நடந்த சம்பவங்களைப்பற்றி அமைச்சர் சபையில் நிகழ்ந்த விவாதம் அந்த ஒப்பந்தத்துக்கு அணிந்துரையாய்விளங்குகின்றது.

### வெளிமடையில் வெப்பக்காற்று

புற்றை அழித்து விடப் புற்றுத் தோன்றினதுபோலப் பண்டாரநாயக ஆட்சியிலே பார்த்த இடமெல்லாம் புதுப் புதுப் புற்றுகள் தோன்றிய வண்ணமாயிருக்கின்றன. அந்த ஒப்பந்தத்தைச் சுற்றிச் சில புற்றுகள் இப்பொழுது தோன்றுவதை நோக்குமிடத்து ஒப்பந்தம் அப்படியே தரைமட்டமாய்விடும் போலிருக்கிறது. சத்தியாக்கிரகம் என்ற புனிதச் சொற்றொடர் இலங்கையிற் பலபடப் பயன்படுவதைக்கண்டு காந்தியடிகளின் உண்மைத் தொண்டர்கள் மனங்கலங்கி வரும் வேளையில் வெளிமடைப் பாராளுமன்றத் தொகுதி அங்கத்தவரும் ஒரு சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பது பரபரப்பை யுண்டுபண்ணுகின்றது. ஒப்பந்தத்தால் விளைந்த பயன் ஒரு சத்தியாக்கிரகத்துக்குப் பதிலாகப் பத்துச் சத்தியாக்கிரகம் என்ற நிலைமையா என்று அரசியல் வாதிகள் அஞ்சுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

ஏவிளம்பி ஹு புரட்டாதி மீ ச உ வெள்ளிக்கிழமை

## உள்ளம் ஒருப்படவில்லையாம்!

—0—

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுதற்கு வேண்டிய வழிவகைகளை ஆலோசிப்பதற்காகத் தலைமை அமைச்சருடன் கலந்துரையாடியவர்கள் மனம் அலமந்துபோகும் வண்ணம் திரு. பண்டாரநாயகவின் உள்ளக் கிடக்கை வெளிவந்திருக்கின்றது. பல்கலைக் கழகப் பண்பாட்டில் வளர்ந்த பெருமையுடையவராகக் கருதப்படும் பிரதமர் இந்நாட்டிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதைப்பற்றி முடிவு செய்வதற்கு முடியாத நிலைமையிலிருக்கின்றார் என்பதை அன்னாரின் கூற்றே அறியத்தருகின்றது. ஆராய்ந்தபின் அவர் ஒரு முடிவுக்கு வருவதாகக் குறிப்பிட்டிருக்கின்றார். பலநாள் முயன்று முதல் அமைச்சர் பதவியைப் பெற்ற திரு. பண்டாரநாயக ஆண்டுகள் [illegible]வாக ஆராயப்படவேண் [illegible] முடிபைடிய அரசின[illegible] ஆறு வாரங்களுள் ஆயந்து திட்டமிட்டுச் சட்டமியற்றியிருக்கவும் மக்களுக்குக் கல்வி வளர்ச்சிக்காக இன்னும் ஒரு பல்கலைக் கழகம் தேச மொழிகளில் ஒன்றாகிய தமிழ் வழி அமைக்கப்படவேண்டிய அவசியத்தை ஒப்புக்கொள்ள மாட்டாதிருப்பது உண்மையில் வியப்பையும் விசனத்தையும் உண்டுபண்ணுகின்றது.

ஒப்பந்தம் ஒன்றை உண்டாக்கிய முதல் அமைச்சர் ஒவ்வொரு வேளையில் ஒவ்வொருவிதமாக விளக்கவுரை செய்தமையால் விளைந்த பயன் ஆட்சியாளர்களுக்கே வினையாய் எழுந்துவிட்டதென்பதைக் கண்டு அஞ்சிப்போலும் இவ்வாறு தமிழ்ப் பல்கலைக் கழகம் பற்றித் திரு.பண்டாரநாயக ஒவ்வாத நியாயங்கூறுகின்றார் உடன்படிக்கையினாலே தமிழ் மக்களுக்கு உண்மையாக உதவி அளிப்பது தலைமை அமைச்சரின் உள்ளக்கருத்தாயிருந்தால், பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவித் தமிழ்மொழிவளர்ச்சிவழிகாட்டுவதற்கு அகமகிழ்ச்சியுடன் முகமலர்ந்து அன்னார் ஆதரவான அன்புரை கூறியிருப்பார்.

ஐக்கியநாட்டு அமைப்பில் இலங்கையும் உதவித் தலைமை இடம் பெற்றுவிட்டதென்று பெருமை மட்டும் இருப்பது நாட்டை முன்னேற்றமடையச் செய்யமாட்டாது. ஊரவர்கள் உள்ளபடி பெறவேண்டிய வசதிகளை அடைய முடியாதவர்களாய் உள்ளந் தடுமாறும்நிலைமையிலிருக்க உலகமதிப்பு என்ன பயனை அளிக்கப்போகின்றது? நீதியான முறையில் ஆட்சிநெறியை அமைத்துப் பல்வேறு இனங்களுக்கும் மொழிகளுக்கும் உரிய உரிமைகளை அளிப்பதற்குஉள்ளம் ஒருப்பட முடியாது அல்லற்படும் தலைமை அமைச்சரின் உடன்பாட்டுக்கும் ஒரு மதிப்பிருக்குமா? ஆராய்ந்து பார்ப்போம் என்ற ஆ[illegible] மொழியில் யாதும் பயன் விளையுமா?

நேயர்கள் நெஞ்சம்

# ஒப்பந்தத்தை உதறித் தள்ளுங்கள்

—————0—————

இலங்கைத்தீவும்,இலங்கை மக்களும் 400நானூறு வருடகாலம் அந்நியரான போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் மூவருக்கும் அடிமை நாடாயும், அடிமைகளாயும் இருந்தமை எல்லோருக்கும் தெரியும். அன்னியர் ஆட்சியால் மக்கள்பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. கடைசியாய் ஆண்ட ஆங்கிலேயர் 150 நூற்றைம்பது வருடம் அரசுபுரிந்தார்கள். முன் ஆட்சிபுரிந்த இருவரிலும் பார்க்க ஆங்கிலேயர் இலங்கை மக்கட்குக் கொஞ்சம் சலுகை காட்டினார்கள். முக்கியமாக, சமயத்திலும், மொழியிலும், கைவைக்கவில்லை. ஆங்கில பாஷையை அரசகரும மொழியாக வைத்திருந்தாலும், இந்த நாட்டு மக்களின் மொழிகளாகிய தமிழையும் சிங்களத்தையும், நாட்டு மக்கள் சந்தோஷமாய் உபயோகிக்க விட்டார்கள். ஆங்கிலேயர் சுயராச்சியம் இலங்கைக்குத்தந்து 10வருடங்களாகின்றன. தமிழ்மக்களும் - சிங்கள மக்களும் ஒத்துழைத்தபடியால் சுயராச்சியம் பெற்றார்கள். ஒரு பகுதி ஒத்துழைக்க மறுத்தால், சுயராச்சியம் ஆங்கிலேயர் தந்திருக்கமாட்டார்கள். இந்தச் சாட்டுடன் அவர்கள் ஆண்டுகொண்டிருப்பார்கள். சுயராச்சியப் பெற்றபின், தமிழரும் சிங்களவரும் இந்தப்பத்து 10வருடங்களில் ஒன்பது 9 வருடங்கள் ஒத்துழைத்தார்கள். சிங்களமக்கள் தாங்கள்[illegible] கூடின தொகையி[illegible]னரென்று, தங்கள் சிங்கள மொழியை மாத்திரம்தான் அரசகரும மொழியாக ஆக்கினார்கள்: தமிழைப் புறக்கணித்து, தமிழரை இலங்கைமக்கள் அல்லவென்று ஒதுக்கினார்கள். தமிழர்கள் எல்லோரும் கூக்குரல் போட்டார்கள். எங்கள் தமிழ்த் தலைவர்கள் பகுதி பகுதியாய் - சமஷ்டிக்கட்சியினரென்றும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் என்றும், அடங்காத் தமிழ்க் கட்சியினரென்றும், ஒரு கட்சிக்குஞ் சேராத கட்சியினரென்றும், மார்புதட்டி ஒற்றுமையில்லாதவர்களென்று சிங்கள அரசாங்கம் அறியும்படி செய்தனர். அதுவுமல்லாமல் "தனிச்சிங்கள மசோதா" நிறைவேற்றிய பின்னும், பாராளுமன்றத்தைப் பகிஷ்கரியாமல் ஒட்டிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் பகிஷ்கரித்ததானால், வெளி உலகம் அறிந்து, இலங்கையில் சனநாயக ஆட்சி இல்லை என்றும் வெள்ளையர்களின் ஆட்சிக்குப் பதிலாக, சிங்கள ஆட்சி நடக்கிறதென்றும், தமிழர்களின் பிறப்புரிமை பாதிக்கப்பட்டதென்றும் சொல்லி எப்படியும் இதற்கு ஓர் முடிவு ஆகவிடாமல், ஓடவும் விடேன் பிடியுங் கொடேன் என்று நின்றார்கள். சமஷ்டிக்கட்சியினர் மாத்திரம், யாழ்ப்பாணத்தில் திரிகோணமலையில், மட்டக்களப்பில் கூட்டங்கள் வைத்து கடைசியாக பண்டாரநயகா அரசாங்கப் "தமிழிற்குச் சம அந்தஸ்து" ஒரு வருடத்திற்குள் தராவிட்டால் சத்தியாக்கிரகஞ் செய்து பெறுவோம், இலங்கையுலுள்ள மறியற்சாலைகட்குச் செல்வோம் என்று தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். அந்தத் தீர்மானப்படி நாள் நெருங்கியது. இதற்குள் சிங்களவரும் ஒரு இலட்சம் பெயர்களை ஆயத்தப்படுதினார்கள், இரண்டு பகுதியும் கிடாப்போர் செய்யத் தொடங்கிவிட்டார்கள் என்று மக்களும் [illegible]ப்பதிகொண்டார்கள். வெளி உலகமும் அறிந்தது. பண்டாரநாயகவும் நல்லாய் அறிந்தார், ஏதோ ஒருவிதமாக, சமரச நிலை ஏற்படட்டும் என்று பண்டாரநாயகாவும் - சமஷ்டிக்கட்சித் தலைவர் செல்வநாயகமும் சந்தித்தார்கள். முதல் முதல் சந்தித்தபோது, ஏகச்சக்கிராதிபதி பண்டாரநாயகா, நீதி வழங்கும்படி போய்க்கேட்ட செல்வநாயகத்திற்கும் அவரின் சகாக்கட்கும் சொன்னார் "சமரசம் பேசலாம், ஆனால் நீங்கள் ஒன்றைமாத்திரம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும். அது என்னவென்றால், இலங்கை முழுதும் தனிச்சிங்களம் மாத்திரம் அரசகரும மொழியாயிருக்கும் தமிழிற்குச் சம அந்தஸ்துக் கொடுபடாது, அத்துடன் உங்கள் எண்ணப்படி நாடு துண்டாடப்படாது வேண்டுமானால் வடமாகாணம், கீழ்மாகாணம் இரண்டு மாகாணங்களிலும் நிர்வாகத்தை தமிழில் நடத்தலாம் உங்கள் பிள்ளைகள் தமிழ்ப் படிக்கலாம். இன்னுமென்னென்னவோ பிச்சையாகக் கொடுத்தார் சிரஞ்சீவி பண்டாரநாயகா. இதற்காகவா ஒப்பந்தம். தமிழிற்குச் சம அந்தஸ்து இல்லாவிட்டால் சத்தியாக்கிரகம் - மறியற்சாலை என்ற தீர்மானத்தை மறந்து, மலைவயிறு நொந்து சுண்டெலியைப் பெற்றவிதம் போலவும், பெரிய வீடென்று பிச்சைக்குப் போய் கரி அவி[illegible] விதம் போல [illegible] தரப்பட்ட தமிழை 800 எண்ணூறு இலட்சம் (இராசாச்சி கணக்கு) சனங்கள் பேசும் தமிழை நாங்களும் எங்கள் பின் சந்ததியும் இந்த இலங்கையில் பாவிக்க உத்தரவு தரச்சொல்லி வரங்கேட்டார்களோ பண்டாரநாயக என்னும் கடவுளை. இவர்களின் தற்கால ஒப்பந்தத்தால் தானே "தனிச்சிங்கள மசோதா" பெலமாகின்றது. இதுவரை பெலக்கவில்லையே. பின்லண்டு (Finland) தேசத்தில் ஒரு பகுதியில் 60000 அறுபதினாயிரம்பேர்கள், பிறிதோர் பாஷைக்கு உரியவர்கள். அந்தச் சிறு தொகையினரின் பாஷையை அரசகரும மொழியாகச் செய்திருக்கு பின்லண்டு அரசாங்கம். என்ன தாராள மனப்பான்மை. 20 இருபது இலட்சம் தமிழ்பேசும் மக்களின் பாஷையாகிய தமிழிற்குச் சம அந்தஸ்துக் கொடுக்கக் கூடாதாம். இவர்களின் ஒப்பந்தம் பிழை. சம அந்தஸ்து வேண்டும். இல்லையேல் நல்ல எண்ணமில்லாமல் தமிழரை நசுக்கக் கங்கணங்கட்டியுள்ள சிங்களவரைப் பிரித்து, தமிழ் நாடும் - தமிழ் இராச்சியமும் ஏற்பட வேண்டும். அப்படியில்லாமல் இதை ஒப்புக்கொண்டால், காலகதியில் தமிழ் இனம் இல்லாதொழியும். தமிழ் மக்கள் வசிக்கும் தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர் குடியேறுவார்கள். ஆனதால் பிறப்புரிமை உள்ள தமிழ்மக்களை அடிமைகளாக்கும் இந்தப் பண்டாரநாயகா-செல்வநாயகம் ஒப்பந்தப்பத்தை உதறித்தள்ளவேண்டும். ஒப்புக்கொள்ளக்கூடாது.

நா. சேனாதிராசா,
யாழ்-கமக்காரர் சங்கத் தலைவர்.
சுழிபுரம்
20 - 9 - 57.

## இலங்கைக்கு ஐ. நா. சபை உப தலைவர் பதவி

—0—

ஐக்கியநாட்டுச்சபை உப தலைவர் பதவிகளில் ஒன்றை இலங்கை பெற்றுள்ளது.

—0—

## மின் விளக்கு உபகரண உற்பத்தி

மின்விளக்கு உபகரணங்களுள் ஒன்றாகிய விளக்கு இருக்கை (பல்ப்) இலங்கையிலேயே செய்தற்கு வேண்டிய திட்டமொன்றை அரசாங்கக் கைத்தொழிற் பகுதி அமைத்துள்ளதாம். இத்திட்டத்தைக் கையாளுதற்கு ஜப்பானிய நிபுணர்கள் உதவி செய்வார்கள் என்ற இத்தொடர்பிற் குறிப்பிடப்படுகின்றது.

## முஸ்லிம் பாடசாலைகளுக்குத் தனிநிர்வாகம்

தமிழ்ப் பாடசாலைகள் எல்லாவற்றுக்கும் ஒரே நிர்வாக ஒழுங்கைச்சென்ற காலத்தில் வித்தியா பகுதி கையாண்டு வந்தது. சிங்கள மக்கள் முன்னணி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்தபின் வேறுபாடுகள் சிறிது சிறிதாய் உண்டாக்கப்பட்டன. ஐம்பது சதவிகிதத்துக்கு மேற்பட்ட முஸ்லிம் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகள் எல்லாவற்றையும் முஸ்லிம் பாடசாலைகளெனப் பிரித்து அவற்றுக்குத் தனி நிர்வாகப்பகுதி ஒன்றும் இப்பொழுது அமைக்கப் படுகின்றதாம்.

# யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

## சைவ ஆசிரியர் பரீட்சைகளும் வேத சிவாகமக் கல்லூரியும்

மேற்படி சபையின் சென்ற வருடாந்தக் கூட்டத்தில் "இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர்" என்னும் பரீட்சைகள் நடத்தப்படல் வேண்டும்.

"சைவ ஆசிரியர்களையும், சைவக் குருமாரையும்பயிற்றுவதற்காக வேத சிவாகமக் கல்லூரி ஒன்றனை நிறுவுதல்வேண்டும்; அதனை நிறுவுதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்வதற்கு சைசபையின் நிருவாகசபைக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும்" என்னும் பிரேரணைகள் பிரேரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

இவற்றை நடத்துவதற்கேற்ற ஏற்பாடுகள் விரைவிற் செய்யப்படும்.

## உலக நீதிமன்றத்தில் கோவா வழக்கு

கோவாவிலிருந்து பிற போர்த்துக்கீசியபகுதிகளுக்கு இந்தியா ஊடாகச் செல்லும் [illegible]மை தமக்கு உளதாகச் செய்தல் வேண்டுமென்று போர்த்துக்கீசிய அரசாங்கம் இந்தியாவுக்கெதிராய் உலக நீதி மன்றத்தில் ஓர் வழக்கைத் தொடர்ந்தது. அண்மையில் விசாரணை செய்யப்படவிருக்கின்ற அவ்வழக்கில் இந்தியா சார்பாகப் பேசுதற்கு ஆங்கில உயர்தர சட்ட அறிஞர் மூவர் செல்கின்றனர் என்று அறிய வருகின்றது.

## அகில உலக தாவர உணவு மகாநாடு

பதினைந்தாவது அகில உலக தாவர உணவு மகாநாடு 9-11-57ல் இந்தியாவில் நடைபெறும் ஒழுங்குகள் செய்யப் பெற்றிருக்கின்றன. இம்மகாநாட்டை இந்திய குடியரசுத் தலைவர் கலாநிதி இராசேந்திரபிரசாத் அவர்கள் திறந்து வைப்பார். உலகின் பல பகுதிகளிலிருந்து வரும்நூறு பிரதிநிதிகள்உட்பட முந்நூறுபிரதிநிதிகள் இம் மகாநாட்டிற் பங்குபற்றுவார்கள்.

இம் மகாநாட்டில் தாவரச் சத்துணவுக் காட்சி ஒன்றும் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசித்தாந்தவித்தியாசாலை ஆரம்பம்

## பண உதவிக்கும் நூலுதவிக்கும் வேண்டுகோள்

சென்ற ஞாயிற்றுக் கிழமை ஆவணி மாசப் பூரணை நாள் (8-9-57) பிற்பகல் சுழிபுரம் தேவதோட்டத்தில் அம்மை அப்பன் சந்நிதானத்தில் யாழ், சைவ சித்தாந்தசங்கத் தலைவர் திரு. நா. சேனாதிராசாவின் தலைமையில் ஆயிரக்கணக்கான சைவர்கள் முன்னிலையில் சைவசித்தாந்த வித்தியாசாலை அங்குரார்ப்பணம் செய்யப்பெற்றது. தலைவர் தலைமைப் பேருரை நிகழ்த்தும்போது "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் யாதினுமரிது. கூன்குருடு முதலிய குறைகளின்றிச் சைவசமயத்தில் பிறத்தல் அதனினுமரிது. இப்படிச் சைவ மதத்திற் பிறந்த நாம், எம் பெருமான் ஏற்படுத்திய சட்டப்பிரகாரம் நடந்து அவரின் பாதாரவிந்தங்களையடைந்து பேரின்ப வாழ்வைப்பெறுவதுமுறை. இதே இப்பிறவியின்நோக்கம். இதை விடுத்து பஞ்சமா பாதகங்களைச் செய்து உத்தம பிறவி எடுத்தும் பயனடையாது உழல்வது சரியா? சைவ நன்மக்களே இந்தச் சைவசித்தாந்த சங்கம் உண்டாகி நாலு வருட காலம்! சைவத்திற்குச் செய்த வேலை சிறிதல்ல! இன்று ஸ்தாபிக்கப்பட்ட சைவசித்தாந்த வித்தியாசாலையானது சைவஉலகத்திற்கு அதிகமான அரிய பெரிய வேலைகளைச் செய்யும். சைவர்களாயுள்ள நாம், எங்கள் கண்மணி போல இவ்வித்தியாசாலையைப் போற்றி வளர்க்க வேண்டும். இவ்வளவுகாலமும் இப்படியான சைவ சித்தாந்த வித்தியாசாலை எங்கேயாயினும் ஏற்படவில்லை. தென் இந்தியாவில் தானும் இல்லை. இது கடவுள் செயலேயன்றி மனிதனின் செயல் அல்ல. இன்று இங்கே அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட சைவசித்தாந்த வித்தியாசாலைக்கு வேண்டிய பண உதவியைத் தனவந்தர்கள் செய்யும்படி அன்பாய் வேண்டுகின்றேன். அத்துடன் சித்தாந்த நூல்களும் தரும்படிவேண்டுகின்றேன் ஸ்ரீமான் த. மயில்வாகனம் ஐக்கிய பகுதி உத்தியோகத்தர் பத்துச் சித்தாந்த நூல்கள் புதிதாய் விலைக்கு வாங்கி உதவி உள்ளார். "ஞானமிர்தம்" 1000 பிரதிகள் அச்சிட்டு இனமாகத் தந்துள்ளார். பொன்னலை திரு. கதிரவேலு அவர்கள் "சுப்பிரமணிய விஸ்வரூப தரிசனம்" 3000 பிரதி அச்சிட்டு இனமாகத் தந்துள்ளார். எல்லாவற்றையும் இனமாக வினியோகம் தோம். இனிமேல் "சைவ சித்தாந்தச் சுருக்கம்" இருபத்தையாயிரம் பிரதிகள் அச்சிடத் தீர்மானித்துள்ளோம் என்று கூறினர். அதன்பின் பிரம்மஸ்ரீ தி. வயித்தியநாதக் குருக்கள் ஸ்ரீ சு. சண்முகரத்தின சர்மா திரு. அ. சிவகுருநாதன், திரு. க. இரத்தினவேல், திரு. சி. மயில்வாகனம், திரு. க. கார்த்திகேசு ஆகியோர் இச்சைவ சித்தாந்த வித்தியாசாலையை ஆதரித்துப் பேசினர்கள்.

# சிவாலயத் திருப்பணியும் வேதாகம பாடசாலையும்

## இருபெரியோர் செய்த ஒப்பற்ற தியாகச் செயல்கள்

### இக்காலத்தவர் செய்யவேண்டியகடமைகள்

(புங்குடுதீவுச் சிவன்கோயிலில் 30-8-57ல் திரு. சி. கணபதிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நடந்த கோயிற் பரிபாலனசபைப் பொதுக்கூட்டத்தில் சைவ பரிபாலன சபைச் சமயப்பிரசார அமைச்சர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள் செய்தசொற்பொழிவின் சுருக்கம்.)

இந்தநூற்றாண்டிலே புங்குடுதீவு என்னும் ஊரில் தோன்றிய பெரியார்களுள் இருவரைத் தலைசிறந்தவர்களாகக் கொள்ளலாம். ஒருவர் பிரம்மஸ்ரீ த. மார்க்கண்டேய ஐயர், மற்றையவர் ஸ்ரீமான் வ. பசுபதிப்பிள்ளை. முந்தியவர் விராட் புருடனுடைய இருதயத் தானமாகச் சிதம்பரம் அமைந்தமைபோல இந்தவூரின் இருதயத் தானமாக இச்சிவாலயத்தை அமைத்தனர். பிந்தியவர் இந்நாட்டிலுள்ள மக்களுடைய அறிவு வளர்ச்சிக்காக வித்தியாலயங்களையும் சைவாலயங்கள் வேதாகமமுறைப்படி நடைபெறச்செய்தற்கு உதவியாக ஒரு வேதாகம பாடசாலையையும் நிறுவினர்.

பிரம்மஸ்ரீ மார்க்கண்டேய ஐயர் ஒரு சிறந்த கடவுள் பக்தர்,

"என்னில் யாருமெனக்
கினியாரில்லை
என்னிலு மினியானொரு
வனுளன்"

என்ற அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் மெய்ஞ்ஞானிகள் தங்களிலும் பார்க்க இறைவனை இனியவனாகக்கொண்டு வாழ்கின்றார்கள் என்பது அறிய வருகின்றது. மற்றையவர்கள் தம்மையே தமக்கு இனியவர்களாகக் கருதிச் சுய நலமுடையவர்களாய்ப் பிறருக்கு ஒரு விதமான உதவியும் புரியாது வாழ்கின்றார்கள். பிரம்மஸ்ரீ மார்க்கண்டேயஐயர் தம்மிலும் பார்க்க ஆண்டவனைப் பெரிதாகக் கருதி வாழ்ந்தார். ஆகையினால் தான் தம்முடைய சொந்தவூரிலே ஒருசிவாலயத்தைத் தாபித்தற்குப் பணம் இல்லாமை காரணமாய் குடியிருந்தவீடு வளவையே சிவாலயத்தை நிறுவ உபயோகித்தார். அவருடைய தவத்தின் பயனாகத் திருப்பணிகள் செய்யப்பெற்று அவராலே காசியிலிருந்து கொண்டு வரப்பெற்ற சிவலிங்கமும் அம்பாளும் அவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் நடைபெற்றன. பிரம்மஸ்ரீ மார்க்கண்டேய ஐயர் சிவபதமடைந்த காலத்துக்கு முன்பு அன்னம் அருந்துவதை நிறுத்தி பல வருடமாய்ப் பால் பழமே உண்டு வந்தார். அவருடைய கடவுள் பக்தியின் பெருமையையும் தவத்தின் மகிமையையும் அவர் சிவபதமடைந்த முறையிலிருந்து நாங்கள் உணரலாம். கதிர்காம யாத்திரைக்குத் தமது சுற்றத்தவர்களுடன் சென்று ஒரு நாள் தெய்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# அணிந்துரை அரங்கம்

**இலக்கியக் குறிப்பு**

பொதுக் கல்வித்தராதரப் பத்திர
(சாதாரணப் பரீட்சை)
1957—1960.

(திருவிளையாடற்புராணம் — இராமாயணம் (கும்பகர்ணன் வதைப்படலம்) மலரும் மாலையும் பண்டைத் தமிழர் பண்பாடு)
G. C. E. (Ordinary Level)
Tamil Text

ஆசிரியர் : பண்டிதர், த. சுப்பிரமணியம், (.உசன்)

பிரதி விலை: ரூபா : 1-50.

பெறுமிடம்: ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்,

பொதுக்கல்வித் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இவ்விலக்கியக் குறிப்புப் பெருந்துணை புரியுமென்று நம்புகின்றோம்

# சைவ சமய பாடப் பரீட்சையும் பாடசாலைப் புத்தகங்களும்

## சைவச் சபைகள் சிந்தித்துச் செயலாற்றுமா?

வித்துவான் பண்டிதர்

திரு. பொ. கந்தையனார்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஐயா அவர்கள் ஊர்கள் தோறும் சைவப்பாடசாலைகள் அமைக்க வேண்டும் என்று கனாக் கண்டார்கள். ஐயா அவர்கள் கண்ட கனவை, சைவ வித்தியா விருத்திச்சங்கமும் பிற சபைகளும் நனவாக்கின. அப்படியே நாவலர் பெருமான் இன்றும் உயிருடனிருந்தால் சைவசமய ஆசிரியருக்கும் மாணவருக்கும் பாடத்திட்டங்கள் வகுப்பதிலும் பரீட்சைகள் நடாத்துவதிலுங் கனாக் கண்டிருப்பார்கள்.

இன்று சைவசமய அறிவுணர்ச்சி மாணவரிடையேயும் ஆசிரியரிடையேயும் குன்றி வருகின்றது. நாஸ்திகம் தலையெடுக்கின்றது. சைவ சமய அறிவை வளர்ப்பதற்காகப் பரீட்சைகள் நடத்தவேண்டுமென்று விவேகானந்தசபை நினைத்தது. சைவ உலகம் அதை வரவேற்றது. வருஷந்தோறும் பதினாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் அப்பரீட்சைக்குத்தோற்றுகின்றனர். அப்பரீட்சை செய்துவருந்தொண்டுமிகப் பெரிது. ஆனால் நாவலர் ஐயா காட்டிய சைவ மரபை அது வளர்க்கவில்லை. நாவலர் ஐயா காட்டிய சைவ மரபை அது வளர்க்கவில்லை. நாவலர் ஐயா எழுதிய இரண்டாஞ் சைவவினாவிடையையே அது தள்ளிவிட்டது என்றால் நாவலர் பெருமானைப் போற்றிக்கொண்டே, ஐயா அவர்களது முடிபுகளை மதிக்க மறுக்கின்றது என்பது தானே பெறப்படுவதொன்றாகும். இன்று சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் இரு பெருஞ் சபைகள் யாழ்ப்பாணத்திலுள்ளன. சைவ சமய ஆசிரியன்மாருக்கும் மாணவர்களுக்கும் ஏற்ற சமய பாடத் திட்டம் வகுத்துப் பரீட்சைகள் நடத்த அவை முன்வருமா?

சைவ வித்தியா விருத்திச் சங்கமும் சைவ பரிபாலன சபை, இந்துக்கல்லூரிச் சபை போன்ற சபைகளும் இவ்விஷயத்தை ஆழ்ந்து சிந்திக்குமா?

சைவப் பாடசாலைகளின் சங்கங்கள் எல்லாம் ஒருங்கு சேர்ந்து ஒரு சமயபாடத் திட்டத்தை வகுக்கலாம். பரீட்சைகளை நடத்தலாம். சைவசமயப் பாடசாலைகளில் வாசிக்கும் புத்தகங்கள்கூட அச்சபையாரால் அங்கீகரிக்கப்பெற்றுவெளியிடப்பெற்ற புத்தகங்களாயிருக்காலாமே. சைவப் பாடசாலைகளிற் படிக்கும் மாணவர்களுக்காகிய புத்தகங்களைச் சைவத் தமிழாசிரியர்கள் எழுதிச், சைவத் தமிழ்ச் சபையில் அரங்கேற்றிச் சைவத் தமிழ்ச் சபைமூலம் வெளியிடப் பெற்றால் எவ்வளவு போற்றப்படத்தக்கதாயிருக்கும். இன்று சைவப் பாடசாலைகளின் வாசிப்புப் புத்தகங்களைத் தனிப்பட்ட ஆசிரியர்களிடமும், புத்தக வியாபாரிகளிடமும், அரசினரிடமும் ஒப்படைத்திருக்கிறோம். இதனால் விளையக் கூடிய பெறுபேற்றையாராவது எப்பொழுதாவது சிந்திப்பார்களா?

### இந்திய மாதரின் முன்மாதிரி

ஆடம்பரமான அணிகளிலும் உடைகளிலும் பணத்தை வீணாகச் செலவு செய்யும் பழக்கத்தை ஒழிக்க வேண்டும். எங்கள் பெண்கள் இந்தியச் சகோதரிகளின் முன்மாதிரியைப் பின்பற்றவேண்டும். எளிய வாழ்க்கை முறையைக் கடைப்பிடித்து இந்திய மறுமலர்ச்சிக்கு இந்திய மாதர் எவ்வாறு உதவுகிறார்கள் என்பதை எம்மவர் உணர்தல் வேண்டும் என்று யாழ்ப்பாணம் தமிழர் அறநெறிக்கழக ஆதரவில் நடந்த பாரதி விழாவில் முதலியார் சி. முத்துத்தம்பி அவர்கள் தலைமை வகித்துப் பேசும் போது கூறினர்.

### பண்டத்தரிப்புச் சைவப்பாடசாலை

சைவப் பிள்ளைகளுக்குச் சைவக் கல்வி ஊட்டுதற்குள்ள ஒரேயொரு பள்ளிக்கூடமாயிருக்கும் பண்டத்தரிப்புச் சைவ ஆங்கில பாடசாலையின் நிர்வாகத்தைச் சைவவித்தியா விருத்திச் சங்கத்திடம் திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று கல்விப்பகுதியைக் கேட்கும் பிரேரணை ஒன்று சக்கானை மேற்கு அரசடி சனசமூக நிலைய விசேட கூட்டமொன்றில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணுக்கர் மதிவள மன்றம்

"தமிழ் வேள்"

### கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலம்

இன்று கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலம். அதன் சுருக்கத்தைக கூறுவேன்; அவதானித்துக் கொள்ளுங்கள்.

முற்பிறப்பிலே ஒருவன் அதிக தருமங்கள் புரிந்தான். ஆனல் சிறிதுபாவஞ் செய்தான். அதனல் கரிக்குருவியாகப் பிறந்தான். அக்கரிக்குருவிக்குக் காகம் முதலியன பல இடையூறுகள் புரிந்தன. பறவைகளுக்கெல்லாம் எளியதான கரிக்குருவி நகரத்தைவிட்டு வனத்துக்குச் சென்றது. அங்கு வழியோரத்தி லிருக்கும் மரமொன்றிற் பதுங்கி இருந்தது.

அம்மரநிழலில் ஒரு சிவபத்தர் "மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றினுஞ் சிறந்தது மதுரை" எனச் சிலருக்குப் போதனை செய்துகொண்டிருந்தார். இதனைக் கவனமாக அவதானித்துக் கொண்டிருந்த கரிக்குருவி உடனே மதுரையையடைந்தது. அங்கு பொற்றுமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளை மூன்று நாள் வணங்கியது. சிவபெருமான் அதன்மேல் அருள்கொண்டு மிருத்தியுஞ் சயமந்திரம் என்ற ஒரு மந்திரத்தை உபதேசித்தருளினர். மிருத்தியுஞ்சய மந்திரமென்றுல் மரணபயத்தினின்று உய்வதற்கான மந்திரம் என்பது பொருளாகும். அதனைச் சிவபெருமான் உபதேசித்தருளியமையால் அது சிற்றறிவு நீங்கிப் பேரறிவு படைத்தது. அதனல் அது சிவபெருமானை வணங்கி "வலியான்" என்னும் பெயரை நிலைநிறுத்திச் சிவபிரான் திருவடியையடைந்தது.

"தக்கான் வாழத் தன்னை வாழும்" "நல்லாரொள்வருளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்பதை இக்கதை மூலம் நாம் அறிந்துகொள்ளக்கூடியதாயிருக்கின்றது.

இப்பாடத்திலே இருசெய்யுள்கள் இருக்கின்றன. அவற்றின் பொழிப்புக்களைக் கூறுகின்றேன். கவனித்துக்கொள்ளவும்.

முதலாவது செய்யுளின் பொழிப்பு;—எல்லையில்லாத ஆன்மகோடிகளுக்குத் தலைவனே வணக்கம். ஆகாயத்தில் தவழும் தண்ணிய கிரணம் வாய்ந்த சந்திரனையணிந்த சடாமகுடத்தையுடையவனே! வணக்கம். எனது சிவபுண்ணியத்தின் பேறுயுள்ளவனே! வணக்கம். அங்கயற்கண் அம்மையார் தலைவனே! உனது திருவடிகளுக்கு வணக்கம்.

இரண்டாவது செய்யுள்:- சிவபெருமான் திருவடிக்கீழ் அன்பில்லாதவர்போல யாவருள்ளும் எளியவரில்லை. சிவபெருமான் திருவடிக்கீழ் அன்பில்லாமையினல் எல்லாப் பறவைகளுள்ளும் எளிதாகத் திரிந்த கரிக்குருவி, சிவபெருமான் திருவடிக்கீழ் அன்புடைமையினல் எல்லாவுயிர்களுள்ளும் வலிதாயிருந்தது என்பதாம்.

அடுத்தபடலம் நாரைக்கு முத்தி கொடுத்த படலம். அதன் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறத்தெரிந்தவர்கள் யாவர்? நீர் கூறுவீரா? (ஆம்) சரி சொல்லும், ஏனையோர் கவனித்துக் கொள்ளுங்கள்.

"தென்பாண்டிநாட்டிலேயுள்ள ஒரு ஊரிலே தாமரைத் தடாகம் ஒன்று இருந்தது. தடாகத்தில் உள்ள மீன்களையெல்லாம் ஒருநாரை உண்டு வாழ்ந்தது. தடாகமானது மழையின்மையால் ஒருமுறை வற்றிவிட்டது. நாரை இரைதேடிக் காட்டிலேயுள்ள ஒரு குளத்தையடைந்தது. அக்குளத்திலே இருடிகள் (இருடிகள்=முனிவர்கள்) நீராடுதலையும், அவர்களுடைய சடை, தோள் என்பனவற்றில் மீன்கள் புரண்டு புரண்டு விழுதலையும் கண்டது. பின்னர் நாரைக்கு மனதில் ஒரு எண்ணம் உதித்தது. அதாவது "இம்மீன்கள் பெருந்தவஞ்செய்தனவாயிருத்தல் வேண்டும். ஆதலின் இவற்றைப் புசித்தலாகாது" என அந்த நாரை எண்ணியது. இங்ஙனமாக,

நீராடிய இருடிகள் நித்திய கருமம் முடித்து மதுரைப் புராணம் படித்தனர். நாரையும் அதனைக்கேட்டுக் கொண்டிருந்தது. அதனல் அதற்கு மெய்யறிவு உதயமாயிற்று. மதுரையையடைந்து பொற்றுமரை வாவியில் நீராடிச் சோமசுந்தரக் கடவுளைத் தியானஞ் செய்தது

எம்பெருமான் அந்த நாரைக்கு அது நினைத்த வடிவமாய்த் தோன்றிவரங் கொடுத்து மறைந்தருளினர்.

அதனல் நாரையானது சிவலோகத்தை யடைந்து சிவகணத்துள் ஒன்றுனது. நாரை கேட்டுக் கொண்ட வரத்தினல் பொற்றுமரை வாவியில் அன்றுதொட்டு நீர் வாழ்வன ஒன்றும் இல்லாதொழிந்தன. பாண்டியனும் பாவமாகிய களையைக் களைந்து தருமப்பயிர் வளர்த்துச் சுவர்க்கத்தையடைந்தான்" என்பதாம்.

சரி, நேரமாய்விட்டது. அடுத்த 49-வது படலத்தைப் படித்து வாருங்கள். அடுத்த பாடத்திற் படிப்போம். (வளரும்)

---

# சிவாலயத் திருப்பணியும் வேதாகம பாடசாலையும்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வத்தன்மை பொருந்திய மாணிக்ககங்கையில் தீர்த்தமாடிச் சந்தியாவந்தனம் புரியும்பொழுது அவர் சிவபதமடைந்தார். குகனடியாரெல்லாரும் கூடி அவருடைய பூதவுடம்பை மாணிக்க கங்கைக் கரையிலே அடக்கஞ் செய்தனர்.

அவரால் தாபிக்கப் பெற்ற இச்சிவாலயத் திருப்பணிகள் இன்னும் பல நடைபெறவேண்டியிருக்கின்றன. கோவிலின் நித்திய பூசைகள் உற்சவங்கள் முதலியன முட்டின்றி நடைபெற ஒழுங்குசெய்ய வேண்டியிருக்கின்றது. இவற்றையெல்லாம் கவனித்து ஷை சிவாலயத்தைச் செவ்வனே நடத்தவேண்டுமென்ற நன்னேக்கத்துடன் கோவில் உரிமைக்காரரும் சைவாபிமானிகளும் இங்கு கூடியிருக்கின்றுர்கள். தாபகருடைய நோக்கம் நிறைவேறவேண்டுமாயின் உங்கள் கோயில் பரிபாலன சபை விதானங்களில் ஷை சபை வேதசிவாகமங்களைச் சைவசமயமுதல்நூல்களாகக் கொள்ளுகின்ற தென்ற விதியைச் சேர்க்க வேண்டும். இச்சிவாலயம் பிரம்மஸ்ரீ மார்க்கண்டேய ஐயர் அவர்களின் தவத்தின் உருவமாக எங்களுக்குத் தோற்றமளிக்கின்றது. அவருக்கு நாங்கள் செய்யக்கூடிய கைம்மாறு அவருடைய நோக்கத்தின் பிரகாரம் கோவிலைச் செவ்வனே நடத்துவதாகும். இவ்வூர்ச் சைவமக்களும் ஈழநாட்டிலுள்ள பிறசைவமக்களும் இக்கோவிலுக்கு வேண்டிய பணவுதவியைப் புரிந்து தாபகருடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்து அம்மை அப்பன் திருவருளை அடைவார்களாக.

ஸ்ரீமான் வ. பசுபதிப் பிள்ளையவர்களும் மார்க்கண்டேயஐயரைப்போலவே தாம் குடியிருந்த வீடு வளவையும் பிற காணிகளையும் ஷை கோவிலுக்குத் தருமசாதனஞ் செய்தனர். இவ்விருபெரியார்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கோவிலுக்கு நிலங்களையும் ஆஸ்திகளையும் உதவச் சிவனடியார்கள் முன்வருவார்களாக.

ஸ்ரீமான் வ. பசுபதிப் பிள்ளையவர்கள் நிறுவிய கல்வி நிலயங்களை அவருடைய தவப்புதல்வர் ஸ்ரீமான் ப. கதிரவேற்பிள்ளையவர்கள்நிருவகித்து வருகின்றுர்கள். ஸ்ரீமான் பசுபதிப்பிள்ளை அவர்கள் நடத்திவந்த வேதாகம பாடசாலை அவர் சிவபதமடைந்தபின் நிற்பாட்டப்பட்டமை வருந்தக்கூடிய செய்தியாகும் ஸ்ரீ ம. ப. கதிரவேற்பிள்ளையவர்களும் மற்றைய சைவாபிமானிகளும் குறித்த வேதாகம பாடசாலை திரும்ப ஆரம்பித்து நடத்தவேண்டியமுயற்சிகளைக் கையாளவேண்டும். ஸ்ரீமான் வ. பசுபதிப்பிள்ளையின் ஞாபகமாக நம்மனோர் செய்யவேண்டியது குறித்த வேதாகம பாடசாலையைத் தாபித்தலேயாகும்.

---

# சமய அடிப்படையிற் சமுதாய வாழ்க்கை

## நாடு நலன்பெறுதற்கு ஒரே ஒருவழி

தனிப்பட்டவர்களுக்கும், அத்தனிப்பட்டவர்கள் மூலம் நாட்டுக்கும் சுபீட்சம் ஏற்படக் காரணமானதும், சகல நன்மைகளுக்கும் சந்தோஷ வாழ்வுக்கும் அடிப்படையானதுமான ஒருசமுதாயம் உருவாகவேண்டுமானல் அந்தச் சமுதாயம் சமய அடிப்படையில் அமையவேண்டும். அதுவே இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் மனிதனுக்கு விமோசனமளிக்கக் கூடியதாகும்.

மனிதனை உயர்த்தி நாட்டுக்குச் சாந்தியைத் தரத்தக்க நாகரிகம், சட்டம், ஒழுங்கு, உயர்பண்பு ஆகியவைகளெல்லாம் மதானுட்டானங்களைக் கைக்கொள்வதன் விளைவாகவே ஏற்படவேண்டியிருக்கிறது

இன்று நாட்டில் நிலவிவரும் குழப்பங்களும் அக்கிரம அட்டூழியங்களும், கொலைபாதகங்களும், அடிமை வாழ்விலிருந்து விடுதலைபெற்ற நாம் சுய ஆட்சியை உருவாக்க முயன்றுவரும் இவ்விடைக் காலத்தில்தவிர்க்கமுடியாத நிகழ்ச்சிகளே என்று அரசியல் வாதிகள் கூறுவர். ஆனல் உண்மை அதுவல்ல. இதற்கெல்லாம் மூலகாரணம் நாம் மதபக்தியற்றவர்களாக ஆகிவிட்டதேயாகும். ஆத்மார்த்தத்தைவிட உலகாயதம் நம்மை அதிகமாக ஆட்கொள்ள நாம் அனுமதித்துவிட்டோம். நாட்டின் வருங்காலச்சிறப்பு ஒரு கட்சியின் அல்லது வர்க்கத்தின் அல்லது வகுப்பின் அரசியல் வெற்றியைப் பொறுத்ததாயில்லாமல் மதாசார அடிப்படையைப் பொறுத்தே இருக்கிறது. ஆகவே சமூகத் தொண்டர்களாகிய நீங்கள் மக்களை இறைவன் பாதையில் செலுத்தத் தூண்டவேண்டும் என்று உருத்திரபுரத்தில் நடைபெற்ற கிராமத் தொண்டர் கூட்டத்திற் பேசும்போது வடமாகாண அரசாங்க அதிபர் ஸ்ரீ ம. ஸ்ரீகாந்தா அவர்கள் கூறினர்.

### கல்வி வசதிப் பணம்

——0——

மாணவரிடமிருந்து பெறும் கல்வி வசதிப் பணத்தைப் பாடசாலைகளின் கல்வி வசதி வேலைகளுக்கு உபயோகிக்கலாம் என்றும் அதற்கு வேண்டிய சுற்றறிக்கை அண்மையில்வெளியிடப்படுமென்றும் தலைமை ஆசிரியர்களின் பிரதிநிதிக் குழு ஒன்றுக்கு கல்வி அமைச்சர் கூறியிருக்கின்றுர்.

### இலங்கையிலிருந்து திருப்புவோருக்கு உதவி

இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட்டு இந்தியாவுக்குத் திரும்புவோருக்கு உதவி செய்தற்கு ஓர் திட்டத்தை வகுத்திருக்கின்றதாம் இந்திய அரசாங்கம். இத்திட்டத்தின்படி திருநெல்வேலிப் பகுதியில் இரு சீலைநெசவுச்சாலைகள் திறக்கப்பட்டு அச்சாலைகளில் இலங்கையிலிருந்து திரும்புவோருக்குத் தொழில் வசதி கொடுக்க ஒழுங்கு செய்யப்படுகின்றது.

### மரவரி முறைக்குப் பதில் மதுக்கடை முறை

இப்பொழுதுள்ள மரவரி முறைக்குப் பதிலாய் மதுக்கடை முறை கையாளப்படுதல் வேண்டும் என்று மதுவிலக்கு விசாரணைச் சபையார் அறிக்கைஒன்று சமர்ப்பித்துள்ளனர்.

மதுபற்றிய வாக்கெடுப்புகளில் வாக்களிக்கப் பெண்களுக்கும் உரிமை கொடுக்க வேண்டுமென்றும், களியாட்ட நிகழ்ச்சிகள் போன்ற நிகழ்ச்சிகளில் எவ்வித மதுவும் இடம்பெறுவதைத் தவிர்கக வேண்டும் என்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### ஆங்கில தலைமையாசிரியர்கள் தராதரம்

உதவிபெறும் ஆங்கில பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் மூன்று பிரிவினராகப் பிரிக்கப்படுவார்கள். முதலாம் பிரிவுக்கு வேதனம ஆண்டு ஒன்றுக்கு 5,250 தொடககம் 9,360 வரையும் இரண்டாம் இரண்டாம் பிரிவுக்கு 3,660 தொடக்கம் 5,540 ரூபா வரையும் மூன்ரும் பிரிவுக்கு ரூபா 3,060 தொடக்கம் 5,820 வரையும் என்றும் அவர்கள் யாவரும் தமிழில் அல்லது சிங்களத்தில் தகுந்த அறிவுடைய வர்களாயிருத்தல் வேண்டும் என்றும் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிவாழ்க்கையே ஆக்கந்தரும்

## இம்மைமறுமைஇன்பத்துக்கு வள்ளுவர் வகுத்த வழி

இம்மை, மறுமை, என்னும் இரண்டையும் தரும் பெற்றி வாய்ந்தது அறம். அத்தகைய அறத்தின் பெருமை அளவிடற்கரிது. இதுபற்றித் தெய்வப் புலவர் விளக்கும் பெற்றி சிந்திக்க வேண்டியது. வீடுபேற்றையும், துறக்கம் முதலிய நலன்களையும் உயிர்களுக்குத் தருகின்றமையால் அறத்தின் மிக்க ஆக்கம் இல்லையென்று முதற் பாட்டிலும் இரண்டாவது பாட்டிலே ஒருவனுக்கு அறத்தின் மேம்பட்ட செல்வம் பிறிதில்லையென்றும் அந்த மேலான அறத்தை மதிமயக்கத்தால் ஒருவன் மறந்தானாயின் அதனிலும் கூடின கேடு இல்லையென்றும் அவர் நன்கு வலியுறுத்தியுள்ளார். அவ்விரு பாடல்களும் பின்வருமாறு:

'சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கு''
''அறத்தி னூங்காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லைக் கேடு''

மூன்றாவது பாட்டிலே தத்தமக்கு இயலுந் திறத்தான் அறமாகிய நல்வினையை ஒழியாது அஃது எய்தும் இடம் எல்லாம் செய்கவென்றும், நான்காவது பாட்டிலே மேற்கூறிய வாற்றான் அறஞ் செய்வான் தம் மனத்தின் கண் குற்றமுடையன் அல்லனாக விளங்க வேண்டுமென்றும் அதுவே அறமாகுமென்றும், அஃதொழிந்தவை அறம் என்று சொல்லப்படமாட்டாவென்றும் அறத்தின் தத்துவத்தை விளக்கியுள்ளார்.

''ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்''
''மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற''

என்பன அப் பாக்கள்.

ஐந்தாம்பாட்டிலே பிறர் ஆககம் கண்டு பொறாமையும் புலன்கள் மேற் செல்லுகின்ற அவாவும் அவையேதுவாகப் பிறரிடத்து வரும் வெகுளியும் அந்த வெகுளி காரணமாக வரும் கடுஞ் சொல்லும் ஆகிய நான்கினையும் கடிந்து இடையறாது நடப்பது அறமாகுமெனவும், ஆறாவது பாட்டிலே அறத்தை நிலையில்லாத யாக்கை உள்ள போதே செய்கவென்றும் சொல்லுகிறார். யாம் இப்போது இளையமாக இருக்கின்றேம். இறக்குஞான்று செய்வோம் எனக் கருதாது அறத்தைத் தினமும் செய்ய வேண்டுமென்றும் அவ்வாறு செய்த அறம் இவ்வுடம்பினின்றும் உயிர்போங் காலத்து அதற்கு அழிவில்லாத துணையாக நிற்குமென்றும் விளக்கியுள்ளார்.

''அழுக்கா றவா வெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வியன்ற தறம்'
''அன்றறிவா மென்னா தறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத்துணை'

என்னும் பாக்களில் அவை காணவருகின்றன.

ஏழாவது பாட்டிலே அறத்தின் பயன் இதுவென்றும் ஆகம வளவையான் உணர்த்தும் தேவை இன்றென்றும் அதற்கு உதாரணமாகச் சிவிகையைக் காவுவானோடு செலுத்துவானிடையுள்ளபேதக் காட்சி அமைகின்றதென்றும் எட்டாவது பாட்டிலே ஒருவன் செய்யாது கழியும் நாள் உளவாகாமல் அறத்தைச் செய்வானாயின் அந்த அறம் அவன் யாக்கையோடு கூடு நாள் வரும் வழியை வராமல் அடைக்கும் கல்லாய் அமையுமென்றும் வீடுபேற்றைக் கொடுப்பது அறம் என்றும் நன்றாக அறிவுறுத்தியுள்ளார். அவற்றைத் தெரிவிக்கும் குறட் பாக்கள் இங்கே வருவன.

''அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை''
''வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்''

ஒன்பதாவது பாட்டிலே இல்லறத்தோடு பொருந்தி வருவதே இன்பமென்றும் அஃதல்லாது வருவன எல்லாம் இன்பமாயினும் துன்பத்தையே கொடுக்குமென்றும் அதனால் புகழ் வரமாட்டாதென்றும், பத்தாவது பாட்டிலே ஒருவனுக்குச் செய்யக்கூடியது (அறம்) நல்வினையேயென்றும், நீக்க வேண்டியது (பழி) தீவினையேயென்றும் செய்ய வேண்டியதையும் நீக்கவேண்டியதையும் வரையறுத்துக் கூறியுள்ளார். அவ்விரு குறட் பாக்களையும் படித்தின்புறுவோமாக.

''அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில''
'செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி''

மக்கள் வாழ்க்கையில் அறத்தின் இடம் எது என்பது இவற்றால் நன்கு தெளிவாகின்றது.

ஸ்ரீ சி. கணேசலிங்க ஐயர்
தெல்லிநகர்

---

# நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அன்ப!

## மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம்

'மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாலயம்' என்ற தலைப்பின்கீழ் திரு செ. கோவிந்தசாமி அவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளை (30-8-57, 6-9-57) இந்துசாதனப் பத்திரிகையில் கண்டேன். அவற்றில் பாடசாலை தொடங்கிய வரலாறு, அதற்காகப் பாடுபட்ட பெரியோர்கள், சய வளர்ச்சியில் அக்காலம் பாடசாலை முன்னேற்றமாக இருந்த நிலை என்பன சுருக்கமாக எழுதப்பட்டிருந்தன. அவற்றைப்பற்றிய உண்மைபற்றி இப்போது ஆராய்வது என்நோக்கமல்ல.

''இத்தகைய பாடசாலை இப்போது சைவ சாதனை குன்றி விவேகானந்த சமய பாடப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றாது பலகாலம் இருந்து வருதலும் வருந்துதற்குரியதாகும்'' என்ற பகுதியைப் பற்றித்தான் இப்போது விளக்கவேண்டியது, அப்பாடசாலையில் நெடுங்காலம் ஆசிரியனாக இருக்கும் என்னுடைய கடமையாகும்.

கட்டுரையாசிரியர் எழுதியிருப்பது உண்மைக்குப்புறம்பானது. சென்றபல வருடங்களாக விவேகானந்த சபைச் சமயபாடப் பரீட்சையில் எமது பாடசாலை தொடர்ந்து பங்குபற்றி வருவதை அச் சபையாரையே கேட்டு அறிந்துகொள்ளலாம். அல்லது அவர்கள் வெளியிடும் பரீட்சைப் பெறுபேறு வெளியீட்டில் பார்த்துக்கொள்ளலாம். இந்த வருடத்திலும் அண்மையில் நடைபெறப்போகும் மேற்படி பரீட்சையில் 4-ம், 5-ம், 6-ம், 7-ம் வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள். பரீட்சையில் கலந்துகொள்வதோடு மாத்திரம் எங்கள் பாடசாலை நிற்கவில்லை. ஒவ்வொரு வாரமும் தேவாரத்தைப் பண்ணோடு ஓதக்கூடிய ஒரு பெரியவரைக் கொண்டு மாணவர்களுக்குத் தேவார திருவாசகங்களைப் படிப்பித்து வருகிறோம என்பதையும் அறியத்தருகிறேன். சரஸ்வதி பூசை மிக நன்றாகவும் ஒழுங்காகவும் நடத்தப்பட்டு வருகிறது. மாணிக்கவாசகர் குருபூசை பாலர் ஞானோதய சங்கத்தாரால் அன்னதானத்துடன் இப் பாடசாலையில் தொடர்ந்து நடத்தப்பெற்று வருகிறது.

ஒரு கிராமத்திலிருக்கும் பாடசாலை மாணவர்களுக்குச் சமய சம்பந்தமாகச் செய்யக்கூடிய எல்லா முயற்சிகளையும் இதயபூர்வமாக நாம் செய்து வருகிறோம். இவற்றைவிட இன்னும் எவ்வளவோ செய்யலாம் என நினைப்பின் கட்டுரை யாசிரியரைப் போன்றோர் பாடசாலையையோ, கோவிலையோ மத்தியதானமாகக் கொண்டு செய்வது சாலச் சிறந்தது ''சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்'' என்பது குறள்.

இங்ஙனம்,
சி. சரவணமுத்து.
மயிலிட்டி தெற்கு,
கட்டுவன்
18-9-57.

---

### காணி விற்பனவு

சாவகச்சேரி, ஹென்ஸ்மன் றேட்டினை முகப்பாகவுடைய 'பறங்கித் தோட்டம்' என்னும் காணி 23 பரப்பு, துண்டுகளாகவும் பிரித்து விற்கப்படும். பின்வரும் விலாசத்துக்கு எழுதி விபரம் அறிக:

G. T. A. C/o
''யாழ் - அகம்'
சாவகச்சேரி.

M 112 20-9-57.

---

### அருணந்திசிவாசாரியர்
## குருபூசை

நாள்: ஏவிளம்பி ஹூ புரட்டாதிமீ சஉ (22-9-57) ஞாயிற்றுக்கிழமை.

இடம்: சைவபரிபாலன சபை நாவலர் மண்டபம்.

நிகழ்ச்சிகள்:
இரவு ½—7 கடவுளாரதனை தமிழ்மறையோதல்

ஸ்ரீமத். தி. கலியாணசுந்தரக் குருக்கள் அவர்கள்
இரவு 7—8 பிரசங்கம்

விஷயம்:
''அருணந்திசிவாசாரியர்''

சொற்பொழிவாளர்:
திரு.வே. சோமசுந்தரம்அவர்கள்

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்,

சைவபரிபாலனசபை,
யாழ்ப்பாணம், 18-9-57.

M 110 20-9-57

---

### பாரதி
### அமர தின விழா

மேற்படி விழா அளவெட்டி சதானந்த வித்தியாலய மண்டபத்தில் முத்தமிழ் மாணவ மன்றத்தினரால் ஆவணி இருபத்தேழாம்நாள் (12-9-57) வியாழக்கிழமை ஆசிரியர் திரு. வ. கந்தையா அவர்களின் தலைமையில் ஆரம்பமாகி நடைபெற்றது. ஆசிரியர் திரு. வ. நல்லதம்பி அவர்கள் ''பாரதி கண்ட கனவு'' என்னும் பொருள்பற்றி நகைச்சுவை ததும்பச் சொற்பொழிவாற்றினார். பாரதியின் கனவை பாரத நாடு நனவாக்கி, இன்று மாஸ்கோ நகரச் சர்வகலாசாலையிலே தமிழ் மணம் கமழச் செய்துவிட்டதெனவும், தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் தமிழ் மக்கள் பாரதிக்குச் செய்யும் தொண்டாகும் எனவும் ஆசிரியர் திரு. ச. சதானந்தம் அவர்கள் தமது குறிப்புரையிற் குறிப்பிட்டார். பின்பு செல்வன் த. சண்முகநாதன், செல்வன் சி. அப்புத்துரை, செல்வி செ. அன்னபூரணம், செல்வி த. அன்னலட்சுமி, செல்வி நா. ஞானம்பிகை ஆகியோரும் குறிப்புரை கூறினர்.

---

### கோட்டு விற்பனவு
### விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரிய கோடு
இல. MB/1261

மீரான்கண்டு காதர் மொகிடீன்
வண்ணார்பண்ணை மேற்கு
வழக்காளி

எதிர்

1. செயிட் சுல்தான் அப்துல் காதர் மொகிடீன் கண்டு, வண் - மேற்கு
2. சுப்பர் தம்பிப்பிள்ளை வண்-கிழக்கு.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB/1261-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1957ஹூ கார்த்திகைமீ 2உ சனிக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை:- ரூபாய் 4377 - 50. ரூபாய் 3000/-க்கு 5-10-56 தொடக்கம் 10-1-57 வரைக்கும் பத்துவீத வட்டியும் அதன்பின் கூட்டிய மொத்தத் தொகைக்குப் பணம் கொடுக்கும் வரை ஐந்துவீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 214/57.

காணி விபரம்:

1. யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை மேற்கில் பிச்சைக்குளம் கரையும் இத்தியடியும் என்னும் காணி நீ, இ. 2 5/8 கல்வீடும் கிணறும். வடக்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும், வான்பயிர் செய் பயிர்களும்.

எல்லை கிழக்கு காதர் மொகிடீன் பெண் சுலாய்தும்மா, வடக்கு காதர் சாகிப் பெண் மொகமது கன்னியாவின் ஆதனம் மறுவும் ஒழுங்கையும். மேற்கு மொகமது உசன் தம்பி முவாலிம் மொகமது லெவ்பை பெண் மொகிடீன் நாச்சியாவின் ஆதனம், தெற்கு பிச்சைப்பிள்ளை மரைக்காயர் சின்னத்தம்பியின் ஆதனம் மறுவும் இவை அடங்கிலும்.

2. வண்ணார்பண்ணை மேற்கில் இத்தியடி என்னும் காணி நீ.இ 3 வான்பயிர் செய் பயிர்களும். இதன் வடக்குப்புறமாக 48 அடி 3½ அங்குல நீளம் உள்ளதும் 13 அங்குலம் அகலமும் உள்ள நிலமும் அதற்குச் சேர்ந்தவைகளும். இந்த 48அடி 3½அங்குலம் நீளம் உள்ளதும் 13 அங்குலம் உள்ள காணிக்கு எல்லை, கிழக்கு K. S. மொகிதீன் கஜியாரின் ஆதனம், வடக்கு உசன் முத்து மொகமதும் பெண் சல்மாவின் ஆதனம்.

வ. அ. துரையப்பா,
கொம்மிஷனர்,
யாழ்ப்பாணம்,
16-9-57.

M 111 20-9-

---

### தமிழ்ச் சர்வகலாசாலை தீர்மானம் இல்லை

தமிழ்க் கலை கலாசாரம் ஆதியவற்றை வளர்த்தற்கு தனித் தமிழ்ச் சர்வகலாசாலை அமைப்பது அவசியமாதலின் அதற்கு அரசாங்கத்தின் உதவியைக் கேட்கும் பொருட்டுத் தமிழ்ச் சர்வகலாசாலை இயக்கத்தார் முதல் மந்திரியைக் கண்டு அதுபற்றித் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். அதுபற்றி இப்பொழுது தீர்மானிக்க முடியவில்லை என்றும் சர்வகலாசாலை விசாரணைச் சபையின் அறிக்கை ஆராய்ந்த பின்னரே எவ்வித தீர்மானமும் செய்ய முடியுமென்றும் அவர் மறுமொழி கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவம் வளர்க்கும் சித்தர்பரம்பரை

## கடையிற் சாமியாரும் அவர் வழி வந்த மகான்களும்

இற்றைக்கு ஐம்பது வருடங்கட்கு முன்னர் மகாவித்துவ சிரோன்மணி ந. ச. பொன்னம்பலபிள்ளை காலத்தில் மலையாளதேசத்திலிருந்து மிக உயர்ந்தவரும் நீண்ட கை கால்களையுடையவரும் இடுப்பிற் கந்தைத் துணியைத் தரித்தவரும் தாடியை யுடையவருமாகிய ஒரு சித்தாடல் புரியும் ஞானியார் ஒரு சில மக்களுக்குக் "குறி" வைக்கப் போகிறேன் எனப் பரிபாஷையிற் கூறி யாழ்ப்பாணம் வந்து பெரியகடையைச் சேர்ந்தார். சிறிது காலத்துக்கு முன் இருந்த கடையிற் சாமியார் அல்ல இவர் முன்னிருந்தவர் - இந்தச் சாமியார் குளிக்காதவர், எதுவும் தம் இஷ்டப்படி புசிப்பவர். வெற்றிலை பாக்கு எந்த நேரமும் வாயில் போட்டுக்கொள்வர். எவர்களையும் ஏசிப் பேசுவார். மதுபானமும் அருந்துவார். இவர் இந்தியாவில் நீதிபதி உத்தியோகம்வகித்திருந்ததாகவும் அவர் பரம்பரையினர் கூறுகின்றனர். எந்த இல்லத்திலும் உணவுஅருந்துவார். அருந்தாமலும் விடுவார். இவரோடு பலர் சீடர்களாகச் சேர்ந்தார்கள்.

அச்சீடர்களுள் ஒருவர் மண்டைதீவைச் சார்ந்த சின்னச்சாமி என்பவர். மற்றவர்கள் கீரிமலை குழந்தைவேற்சாமி, பரமகுருசாமி, சாவகச்சேரி முருகேசுச்சாமி, செல்லப்பாச்சாமி முதலானோரும் இவர்கள் வழிவந்த சடைவரதர் பொன்னப்பாச் சாமியார், அருளம்பலசாமி, சின்னப்புச்சாமியார்முதலானோரும் ஸ்ரீமத் யோகர்சாமியாரும் அடங்குவர். கடையிற்சுவாமிகள் பல சித்தாடல்களையும் புரிவர். இவருடைய வாக்குகளின்படி நிகழ்ச்சிகள் நிகழ்ந்திருக்கின்றன. இவர் சிலகாலம் மண்டைதீவிற்கும் போய் அங்கும் தங்கியுள்ளார் அங்கு இவர் வசித்த இல்லத்தில் இவர் படுத்திருந்த கட்டில் தலையணைகள் இருப்பதாகவும் அறியக் கிடக்கிறது. புரட்டாதி மாதத்தில் இச்சுவாமியாருக்குக் குருபூசையும் செய்து வருகிறார்கள் இச்சுவாமியாருடைய சமாதி நீராவியடியில் இருக்கிறது. இச்சமாதியில் வருடந்தோறும் குருபூசையும் செய்து வருகிறார்கள். இக்குருபரம்பரையினருள் பலர் இன்றும் இருக்கிறார்கள். இக்காலதில் சைவம் நிலைத்திருக்கிறது என்று சொன்னால் அது கடையிற் சாமியார் பரம்பரையினரால் என்றே கூறலாம்:

— செ. கோ. —

### இறைத் தியானத்துடன் எச்செயலையுஞ் செய்க

—0—

1-ம்பக்கத் தொடர்ச்சி

ஆகையினாலே உங்களுக்கு அன்பாய்ச் சொல்லுவதென்னவென்றால் நீங்கள் இறைவனை இடைவிடாது சிந்தித்தபடியே எந்தச் செயலையும் செய்யவேண்டுமென்பதாகும். இறைத் தியானமே வாழ்க்கையின் அத்திபாரமாயமைதல் வேண்டுமென்பதை எனது வழக்கம்போல் மீட்டும் கூறுகின்றேன்,

(பூமிதான இயக்கத் தொண்டர்களுக்கு ஸ்ரீ சுவாமி இராமதாசர் அவர்களாற்றிய சொற்பொழிவொன்றின் சாரம்,)


## ஈச்சுர நிச்சயம்

——::——


யாழ்ப்பாணத்துக் கொக்குவில்,
குகதாசர்
ச. சபாரத்தினமுதலியார் அவர்கள்
எழுதியது

திருமயிலை
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை பதிப்பு.

விலை ரூபா: 3-00.

கிடைக்குமிடம்:
மனேஜர், "இந்துசாதனம்"
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

M. 102, 6, 13, 20-9-57.





## உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 22—9—57 —— 28—9—57. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

வரவு செலவைச்சமாளிப்பதில் நீர் வருத்தப்படுவீர் இரகசியப் பகைவரால் தொந்தரவுகள் உண்டாகும், ஆனால் நீர் அவற்றை வெல்லக்கூடியதாயிருக்கும். குடும்பத்துணைவருடன் வெள்ளியும் சனியும் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,**

குடும்பச்சிக்கல்கள் தொடர்ந்து தளப்பமாகவே யிருக்கின்றன. பணத்துறையில் நல்ல வாரம். உம்முடைய பழைய முதலீடுகளிலிருந்து நீர் அதிக இலாபங்களைப் பெறக்கூடியதாயிருக்கும். வார நடுப்பகுதியில் நண்பர்கள் இனத்தவர்களுடன் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். உம்முடைய உத்தியோகக் கருமங்களிலும் பல திருத்தங்களை நீர் காண்பீர். போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,**

சொந்தக்கருமங்களுக்கு நல்ல வாரம், உம்முடைய உத்தியோக கருமங்களும் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். காணிகள் காணிப் பொருள்கள்மூலம் இலாபங்கள் நிச்சயம். ஆனால் இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**சிங்கராசி மகம், உத்திரம் பூரம், 1ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம் சொந்தச் சிக்கல்கள் நீக்கப்படும். தனலாபமும் சமூக சித்தியும் நிச்சயம் வார இறுதியில் சிறு அபாயங்களுக்கு அறிகுறிகளிருக்கின்றன,

**கன்னிராசி உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

உம்முடைய சொந்தக் கருமங்களும் உத்தியோக கருமங்களும் சிறிது காலத்துக்குக் குழப்பமாயிருக்கும். ஒரு சமாதானத்தைச் செய்வதிலோ நீக்குவதிலோ நீர் வருத்தப்படுவீர். தேக சுகமும் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

செலவதிகரிக்கும். உம்முடைய கருமங்களில் அதிக எதிர்ப்பையும் கண்டனங்களையும் நீர் முன்னிட வேண்டிவரும். மேலும் சிறிது காலத்துக்கு உம்முடைய தேக சுகத்தைக் கவனிக்கவும், இடைஞ்சல்களிலிருந்து நீங்க நண்பர் உதவிப்பண்ணுவார்கள்,

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

பணத்துறையைச் சிந்திக்கும் பொழுது மிக நல்ல ஒரு வாரம். நிலைத்திருக்கும் சில கஷ்டங்களை நீர் நீக்கக்கூடியதாயிருக்கும். மேலதிகாரிகளிடமிருந்து உதவிகளுக்கும் இலாபங்களுக்கும் இடமுண்டு.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

இனத்தவர்கள்மூலம் சில சிறு தொந்தரவுகள் தவிர இந்தவாரம் நல்லாயிருக்கும்போற் காண்பிக்கின்றது, உம்முடைய முயற்சிகள் பலவற்றில் சித்திக்கு இடமுண்டு. காசிலும் பார்க்கப் புகழ் பெறுதற்கு இலகுவாயிருக்கும்.

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.**

தொந்தரவுண்டாக்கும் பெண் இன இனத்தவர்களைப்பற்றி இந்தவாரம் எச்சரிக்கையாயிருக்கவும், முதல் இரு நாட்களும் கவனமாய்க்கழிக்கவேண்டும். வாரமிகுதி திரும்பவும் நன்றாகும், தனலாபமும் நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

மனத்துன்பங்களுக்கிடமுண்டு. மற்றவர்களுடைய கருமங்களில் இந்த வாரம் நீர் மிகவும் ஈடுபட்டிருப்பீர். திங்கள் இரவு செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்க வேண்டும். வாரமிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

முன் அரைவாரம் ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும், தனலாபம் நிச்சயம். ஆனால் சில குடும்பச் சச்சரவுகளுக்கிடமுண்டு. புதன் பிற்பகல், வியாழம், வெள்ளி காலை கவனமாய்க்கழிக்க வேண்டும்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கோடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் கந்தையா அவர்களால் 20-9-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org